படியுங்கள்
தின காற்று
நாளிதழ் செய்திகள்
மற்றும் விளம்பரம்
தொடர்புக்கு:
9841483714
வாட்ஸ்அப்
9345368683.

தின காற்று
DHINA KAATTRU
Tamil Morning Daily
RNI No: TNTAM/2015/65666
DHINA KAATTRU
நடுநிலைக் காலை நாளிதழ்
தமிழகம் மற்றும் புதுவையில்...

தின காற்று நாளிதழ் – தமிழர் மனசு
மாத இதழுக்கு
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
குறித்த
தொடர்புக்கு:
9841483713 /
9345368683.

மலர்: 10 | இதழ்: 180 | 29.08.2025 | வெள்ளிக்கிழமை | பக்கம் 4 | விலை : 5/ | சென்னை
Volume: 10 | Issue: 180 | 29.08.2025 | Friday | Page: 4 | Price : 5/ | CHENNAI

# கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் நல்லகண்ணு விரைந்து நலம் பெற விழைகிறேன்: முதல்வர் ஸ்டாலின்

சென்னை:

"நல்லகண்ணு அய்யா விரைந்து நலம் பெற விழைகிறேன்." என தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "உடல் நலிவுற்று மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் தகைசால் தமிழர் தோழர் நல்லகண்ணு அய்யா உடல்நலன் குறித்து தோழர் முத்தரசன், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோரிடம் தொடர்ந்து நலன் விசாரித்து வருகிறேன். நல்லகண்ணு அய்யா விரைந்து நலம் பெற விழைகிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.



முன்னதாக, மருத்துவ துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (28.08.2025) சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உடல் நலக்குறைவு காரணமாக அனுமதிக்கப்பட்டிருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும்தலைவர்நல்லகண்ணுவை நேரில் சந்தித்து, அவருக்கு வழங்கப்படும்சிகிச்சைகுறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: கம்யூனிஸ சித்தாந்தத்தின் முன்னோடி, முதுபெரும் தலைவரும், தன்னலம் கருதாது பொதுச் சேவையில் பெறும் உச்சமாக திகழ்ந்தவருமான பெருமதிப்பிற்குரிய அய்யா நல்லகண்ணு.

அவர், கடந்த 22.08.2025 அன்று வீட்டில் தவறி விழுந்த காரணத்தினால்தலையிலும், கைவிரலிலும் சிறிய அளவிலான காயங்கள் ஏற்பட்டு, உடனடியாக அவரது குடும்பத்தினர் தனியார் மருத்துவமனையில் அனுமதித்து, சிகிச்சை அளிக்கப்பட்டது.

தனியார் மருத்துவமனை நிர்வாகம் உடனடியாகசி.டி.ஸ்கேன்எடுத்து அந்த பரிசோதனையில் தலையில் உள்காயம் ஏதும் இல்லை என்பதை உறுதிபடுத்தியிருந்தனர். இந்நிலையில் 24.08.2025 அன்று மாலை அவர் உணவருந்தும்போது உணவுக்குழாயில் புரைஏறியதால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு, இரவு 10.30 மணிக்கு மேல்சிகிச்சை தேவைப்பட்டநேரத்தில்சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

மருத்துவமனையின் முதல்வர் தலைமையிலான அனைத்து சிறப்பு மருத்துவர்களும் மிகுந்த கவனத்தோடு அவரது உடல்நிலையைதொடர்ச்சியாக கண்காணித்து வந்தனர்.

மருத்துவ குழுவின் பரிந்துரைப்படி அவருக்கு செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டது. உணவுப்பொருட்கள் சுவாசக்குழாயில் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு, Bronchoscopy மூலமாக உணவுத் துகள்கள் அகற்றப்பட்டது. நோயின் தீவிரதன்மையைஅறிந்து அவருக்கு Antibiotics மற்றும் பிற மருந்துகள் செலுத்தப்பட்டது.

48 மணி நேரத்தில் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டதால் 26.08.2025 அன்று செயற்கை சுவாசம் நிறுத்தப்பட்டது. உறவினர்களை அடையாளம் கண்டுக்கொள்ளும் அளவுக்கு முன்னேற்றம் காணப்பட்டது.

இந்தநிலை யில் நேற்று 27.08.2025இரவுவாயில் Secretion தேங்கியதால் மீண்டும் அவருக்கு சுவாச பிரச்சனை ஏற்பட்டது. எனவே, உடனடியாகஅவருக்குசெயற்கை சுவாசம் கொடுக்கப்பட்டு, மேலும் மருத்துவ குழுவின் அறிவுரைப்படி, தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது அவர் தீவிர கண்காணிப்பில் உள்ளார், அவரது உடல் நிலை சீராக உள்ளது. ராஜிவ் காந்தி அரசு மருத்துவர்களுடன் அப்பல்லோ மருத்துவமனையின் மருத்துவர் மரு.ராஜ் பி. சிங், தொற்றுநோய் நிபுனர் மரு.பிரவீன் போன்றவர்கள் இன்று பிற்பகல் இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மருத்துவர்களுடன் தோழர் நல்லகண்ணுவை பரிசோதிக்க உள்ளனர்.

இவ்வாறு அனைத்து முயற்சிகளையும் மருத்துவமனை நிர்வாகம் செய்து வருகின்றது. பொதுமக்களும் அரசியல் இயக்கங்களை சேர்ந்த முன்னோடிகளுக்கும் ஒரு வேண்டு கோள் 101 வயதை கடந்தவர், விடுதலை போராட்ட வீரர், மிகப்பெரிய தலைவரான தோழர் நல்லகண்ணுவுக்கு இப்போது தேவையே தீவிர சிகிச்சையும் தனிமையும் பாதுகாப்பும்தான். இவரது உடல்நிலை குறித்து விவரம் தெரிந்து கொள்ள மருத்துவமனையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்களிடன் உடல் நிலை குறித்து விவரங்களை கேட்டு தெரிந்து கொள்ளலாம். தேவையில்லாமல் அவரை நேரில் சந்திப்பதை தவிர்க்க வேண்டும். இவ்வாறு அமைச்சர்தெரிவித்திருந்தார்.




## மூளை அமீபா பாதிப்பு தொற்று நோய் அல்ல; பதற்றம் வேண்டாம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன்

சென்னை:

"மூளை அமீபா பாதிப்பு, தொற்று நோய் இல்லை என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். எனவே பெரிய அளவில் பதற்றமடைய வேண்டியதில்லை." என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.



சென்னையில் நேற்று அமைச்சர் மா.சுப்பிரமணியன்செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது மூளைக்காய்ச்சல் குறித்தான கேள்விக்கு பதிலளித்த அவர், "கேரளாவில் 18 பேர் மூளை தின்னும் அமீபா நோய் பாதிப்பிற்குள்ளாகி சிகிச்சை பெற்று வருவதாக சொல்லப்பட்டுள்ளது.

கடந்த 1 வாரகாலமாகவே இந்த நோயின் தன்மை கூடியிருக்கிறது. நோய் பாதிப்பிற்கான காரணங்களை மருத்துவ வல்லுநர்களிடம் கேட்கும்போது, அசுத்தமான நீர், மாசுபட்ட நீர் நிரம்பிய குளம், குட்டைகள், நீர்நிலைகளில் தேங்கிய சேறுகளில் தான் அமீபா உருவாவதாக சொல்லப்படு கிறது.

அத்தகைய குளம், குட்டைகளில் குளிக்கும்போது மூக்கின்வழியே அமீபா சென்று மூளையை பாதித்து, மூளைக்கா ய்ச்சல் ஏற்பட்டு மரணங்கள்நிகழ்கிறது. இது தொற்று நோய் இல்லை என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். எனவே பெரிய அளவில் பதற்றமடைய வேண்டியதில்லை.

அசுத்தமான குளம் குட்டைகளில் குளித்த தால் தான் நேக்லேரியா ஃபோவ்லேரி (Naegeleria Fowleri) என்ற அமீபா ஏற்பட்டு, அரிதான மூளைக் காய்ச்சல் நோயான, முதன்மை அமீபிக் மெனிங் என்சஃபலிட்டிஸ் (Primary Amoebic MeningoEncephalitis (PAM) நோய் பாதிப்பு ஏற்படு கிறது.

இந்த நோய் பாதிப்பிற்குள்ளானவர்களுக்கு கடுமையான தலைவலி, காய்ச்சல், வாந்தி, மனகுழப்பநிலை, கழுத்து வலி, மயக்கங்கள் போன்ற பாதிப்புகள் ஏற்படுகிறது. கேரள மாநில சுகாதார த்துறை நோய் பாதிப்பிற்குள்ளா னவர்களுக்கு சிறப்பான சிகிச்சைகளை வழங்கி நோய் பாதிப்பிற்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். இந்நிலையில்தமிழ்நாட்டில்உள்ள பொதுமக்களுக்கு அறிவுறுத்துவது என்னவென்றால் குளம் மற்றும் குட்டைகள், பராமரிப்பு இல்லாத நீச்சல் குளங்களில் குளிப்பதை தவிர்த்துக் கொள்வது நல்லது" என்று தெரிவித்துள்ளார்.

பின்னர் தெருநாய்க்கடி தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், "தெரு நாய்கள் பிரச்சினை தொடர்பாக உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் கருத்துகள் மாறுபட்டு உள்ளது. தெருநா ய்களுக்கு கருத்தடை செய்து அதனை பிடித்த பகுதிகளில் விட்டுவிடுவது மட்டுமே தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கையாகும். முதல்வர் தெருநாய்க்கடி சம்பவங்கள் குறித்து விவாதிப்பதற்காக பல் வேறு துறைகள் ஒருங்கிணைத்துகூட்டம்ஒன்றை நடத்தினார்.

அதில் தெருநாய்கள் பராமரிப்பதற்காக குடில்கள்அமைக்கப்பட்டு பல் வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு முன்பு வட்டார அரசு மருத்துவமனை, அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில்மட்டுமேமருந்துகள் வழங்கப்பட்டு வந்தது.

இந்த அரசு அமைந்த பிறகு தான் தமிழ்நாட்டு மருத்துவத்துறை வரலாற்றில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்பற ஆரம்ப சுகாதார நிலையங்களில் நாய்கடிக்கு ARV மருந்துகள், பாம்புக் கடிக்கு ASV மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டு கொடுக்கப்பட்டு வருகிறது" இவ்வாறு அவர் தெரிவித்தார்.



அருப்புக்கோட்டை நகரத்தில் நேற்று (28.08.2025) காலை 10.00 மணி முதல் நெசவாளர் காலனியில் உள்ள சமுதாய கூடத்தில், உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் நகர நிலவரித் திட்ட (செட்டில்மெண்ட்) பட்டா மாறுதல் உத்தரவு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் 23 பயனாளிகளுக்கு வழங்கினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அருப்புக்கோட்டை நகர நிலவரித் திட்டம் தனி தாசில்தார் பொன்ராஜ் சிறப்பாக செய்திருந்தார். நிகழ்ச்சியில் வட்டாட்சியர் அலுவலக அலுவலர்கள் மற்றும் திமுக பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அருப்புக்கோட்டை வட்டத்தைச் சேர்ந்த 11 பயனாளிகளுக்கும், சிவகாசி வட்டத்தைச் சேர்ந்த 5 பயனாளிகளுக்கும் என மொத்தம் 16 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டாக்களை வருவாய்த்துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் டாக்டர் சுகபுத்ரா ஐஏஎஸ், விருதுநகர் நகர சேர்மன் தனபாலன், திமுக பிரமுகர் சுப்பாராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



நாகர்கோவில் மாநகராட்சி 19 வது வார்டுக்குட்பட்ட மேல ஆசாரிபள்ளம் R.C சர்ச் அருகில் ரூ. 3.60 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார். உடன் துணை மேயர் மேரி பிரின்ஸி லதா, மாமன்ற உறுப்பினர் அமல செல்வன், மாநகர செயலாளர் ஆனந்த், பகுதி செயலாளர் சேக்மீரான் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், விழுப்புரம் மாவட்ட நிர்வாகம் இணைந்து நடத்தும் பட்டாசு தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது. உடன் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் கூடுதல் இயக்குநர் (திருச்சி ) இரா.இராஜசேகரன், மாவட்ட வருவாய் அலுவலர் கி.அரிதாஸ் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



# விழுப்புரம் ஆதி பராசக்தி கோவிலில் சிறப்பு வழிபாடு



விழுப்புரம், ஆக.29

விழுப்புரம் கிழக்கு புதுச்சேரி சாலையில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் சக்தி பீடம் அமைந்துள்ளது. இக்கோவிலில்ஆவணிமாதஅமாவாசையைமுன்னிட்டு அதிகாலை 5.30 மணி முதல் 7 மணி வரை அம்மனுக்கு பால், தயிர், நெய், இளநீர், பன்னீர், சந்தனம், எண்ணற்ற வாசனை திரவிய பொருட்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு, தீபாராதனை காண்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து காலை 9 மணியளவில் அம்மனுக்கு தங்கக்கவசம் அணிவிக்கப்பட்டு, மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதில் நூற்றுக்கண க்கான செவ்வாடை பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. தொடர்ந்து, மாலை 6.30 மணிக்கு ஓம்சக்தி வழிபாட்டு மன்றம் சார்பில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதற்கான ஏற்பாடுகளை உபயதாரர் ஜெயபாலன், சித்தர் சக்தி பீடதலைவர் சாவித்திரி, செயலாளர் சசிதரன், பொருளாளர்சீதாலட்சுமி, சக்தி பீட செவ்வாடை தொண்டர்கள் ஜெயந்தி, சரவணன், நிர்மலா, டேனியல், காயத்திரி, சத்யா, சேர்ந்தனூர் ராஜா, பழனிசாமி, சண்முகம், சுப்பிரமணி ஆகியோர் செய்திருந்தனர்.



## மதுரையில்

# பயர் பீ டெக்னோ சர்வீசஸ் புதிய அலுவலகத்தை அமைச்சர் திறந்து வைத்தார்

மதுரை, ஆக. 29

ஃபயர்பீ டெக்னோ சர்வீசஸ் பிரைவேட். லிமிடெட், பிரியாபாலனால் நிறுவப்பட்டு வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனம், மதுரையில் அதன் புதிய அலுவலகத்தை அதிகாரப்பூர்வமாகத் திறந்தது. ஃபயர் பீ டெக்னோ சர்வீசஸ் நிர்வாக இயக்குநர் பாலசுப்ரமணியம் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாகராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். மென்பொருள் மேம்பாட்டில் 15 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன், பிரியாபாலன் IT துறையில் வளர்ந்து வரும் பெயராக *Fire bee Techno Services* ஐ நிறுவியுள்ளார். புதிய அலுவலகம், எண். 14, ராம் சஞ்சீவ் பிளாசா, எதிரில் அமைந்துள்ளது. லக்ஷ்மணா மருத்துவமனை, மதுரை நிறுவனத்தின் விரிவாக்க செயல்பாடுகள் மற்றும் குழுவிற்கு ஆதரவளிக்கும். *Fire bee Techno Services* ஆனது பிளாக் செயின் மேம்பாடு, இணையம் மற்றும் மொபைல் பயன்பாடுகள், கிளவுட் தீர்வுகள் மற்றும் IT ஆலோசனைகளை இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள 150+ நாடுகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, (28.08.2025) அன்று திருத்துவபுரம் புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளி கலையரங்கில் நடைபெற்ற நான் முதல்வன் உயர்வுக்கு படி திட்ட முகாமில் கலந்துகொண்டு, மாணவ மாணவியர்களிடையே கலந்துரையாடினார்.

தமிழக கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள, நெமிலி ஊராட்சி ஒன்றிய அலுவலக, புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர், ஜெ.யு.சந்திரகலா, சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் A.M.முனிரத்தினம், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், அரசு அலுவலர்கள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தென்காசி மாவட்ட நிர்வாகிகள் மற்றும் மண்டல தலைவர்கள் ஆலோசனை கூட்டம் மாவட்டத் தலைவர் ஆனந்தன் அய்யாசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் முன்னாள் மாவட்டத் தலைவர் தீனதயாளன் ஜி மற்றும் மாவட்ட நிர்வாகிகள், மண்டல் தலைவர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம் திருமங்கலம் பஸ் ஸ்டாண்டு எதிரில் B.G. நாயுடு ஸ்வீட்ஸ் ஸ்டால் ஷோரும் தமிழகம் முழுவதும் 42 கிளைகளை தொடங்கி ஸ்வீட்ஸ், உயர்தர இனிப்பு வகைகளில்தனி முத்திரை பதித்து அதிகவாடிக்கையாளர்களின்நல் ஆதரவோடு விற்பனை செய்து வருகின்றனர். மதுரையில் கீழவெளி வீதி, வில்லாபுரம், டவுன் ஹால் ரோடு, திருநகர், புதூர், அண்ணா பேருந்து நிலையம், P.P சாவடி, BB குளம் போன்ற கிளைகளை கொண்ட கடைகள் இயங்கி வருகிறது. தற்போது B G நாயுடு ஸ்வீட்ஸ் தனது 11 வது கிளையின் திறப்பு விழா திருமங்கலம் பகுதியில் 27.08.2025 இனிதே ஆரம்பிக்கப்பட்டது. இதில் கடையின் உரிமையாளர் பாலாஜி, குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்கள், தொழிலதிபர்கள், வழக்கறி ஞர் முத்து கிருஷ்ணன், தி.மு.க தொண்டரணி காமாட்சி, மேலாளர் அருண்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த் அண்ட் கோ உரிமையாளருமான வசந்தகுமார் அவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சேலம் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் சேலம் மாநகர மாவட்ட வர்த்தக பிரிவு தலைவர் எம்டி. சுப்பிரமணியம் தலைமையில் வசந்தகுமார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி நினைவு அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் மாநகர பொருளாளர் தாரை ராஜகணபதி முன்னிலை வகித்தார். மாநகர துணை தலைவர் ஈஸ்வரி வரதராஜு, மாநகர பொதுச்செயலாளர்கள் செவ்வாய்பேட்டை சீனிவாசன், சவுக்கத் அலி, மிட்டாய் சீனி, மண்டல தலைவர்கள் சாந்தமூர்த்தி, நிசார் அஹமது, மோகன், நடராஜ், மாநகர செயலாளர்கள் செங்கல் ரவி, ராஜதுரை, வர்த்தக பிரிவு கிழக்கு மாவட்ட தலைவர் சண்முகம், ஐ என் டி யு சி மாநகர தலைவர் தாஜ்ம இம்தியாஸ், அப்பாஸ், சிறுபான்மை பிரிவு ஜாவித்,ஊடகப்பிரிவு தமிழரசன், டிவிஷன் தலைவர்கள் செல்வராஜ், கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.




மறைந்த முன்னாள் கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினரும், வசந்த்&கோ நிறுவனருமான ஹச்.வசந்தகுமார் அவர்களின் 5ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அகஸ்தீஸ்வரத்தில் உள்ள மணிமண்டப சமாதியில் எம்.பி. விஜய்வசந்த் அவரது தாய் மற்றும் குடும்பத்தினருடன் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.




தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் மாவட்ட கல்வி மீளாய்வுக்கூட்டம் பள்ளி தலையாசிரியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்களுடன் நேற்று (28.08.2025) நடைபெற்றது. மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) மாதவன் மற்றும் பலர் உடன் உள்ளனர்

# கோவையில் பத்து லட்சம் ரூபாய் சலவை நோட்டுகளில் ஸ்ரீ செல்வ விநாயகர்



கோவை, ஆக. 29

கோவை மாநகர் பகுதியில் விநாயகர்சதுர்த்தியை முன்னிட்டு 712 சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு சிறப்பு வழிபாடு நடைபெற்று வருகிறது. அதனை தொடர்ந்து கோவை ரத்தினபுரி சாஸ்திரி சாலை சசிகுமார் திடலில் இந்து முன்னணி 46 வது டிவிஷன் நடத்தும் 33வது ஆண்டாக அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ செல்வ கணபதி சிலைக்கு பத்து லட்சம் ரூபாய் நோட்டுகளில் அலங்காரம் செய்யப்பட்டு உள்ளது. இதில் பத்து ரூபாய், இருபது ரூபாய், 50 ரூபாய், 100 ரூபாய், 200 ரூபாய், 500 ரூபாய் வரை ஸ்ரீ செல்வ கணபதி சுற்றி அலங்காரம் செய்யப்பட்டதை கண்டு பக்தர்கள் ஆர்வத்துடன் வழிபாடு செய்து வருகின்றனர். பத்துலட்சம்சலவை ரூபாய் நோட்டால் விநாயகருக்கு அலங்காரம் செய்யப்பட்டது பொதுமக்கள் வியப்புடன் மற்றும் ஆச்சரியத்துடன் பார்த்து சென்றனர்.

மேலும் இந்து முன்னணி சார்பாக ரத்தினபுரி நகரின் சாஸ்திரி ரோடு பகுதியில் 9 அடி உயரத்தில் 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான பண அலங்காரத்தில் விநாயகர் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இதில் இந்து முன்னணி மாவட்ட செய்தி தொடர்பாளர் தனபால், பாரதிய ஜனதா கட்சி ஓ பி சி அணி தலைவர் சுதாகர்,

இந்து முன்னணி நகர பொதுச்செயலாளர் சங்கர், பொருளாளர் கிஷோர் குமார், செயலாளர்கள் மனோஜ் குமார், மணி, மற்றும் நகர நிர்வாகிகள் மக்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு விநாயகரை தரிசனம் செய்து சென்றனர். பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.



சேலம் மாவட்டத்தில் "மாபெரும் தமிழ்க் கனவு" நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தலைமையில் சோனா தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று (28.08.2025)நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில்எழுத்தாளர்முனைவர்.பாரதிகிருஷ்ணகுமார் "உயர் குணமேவிய தமிழா" என்ற தலைப்பில் கருத்துரை ஆற்றினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், சேலம் 7 கலைக் கல்லூரி முனைவர் வெ. கலைச்செல்வி, சேலம்வருவாய்கோட்டாட்சியர்அ.அபிநயா, சேலம்சோனாகல்விக்குழும தலைவர் வள்ளியப்பா ஆகியோர் உள்ளனர்.



கடலூர் அறிஞர் அண்ணா விளையாட்டு மைதானத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிக்கான மாவட்ட அளவிலான சிலம்பம் விளையாட்டுப் போட்டியினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் நேற்று (28.08.2025) தொடங்கி வைத்தார்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்கள் ஜெர்மன் மொழி தேர்வுக்கான பயிற்சி

## மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

பெரம்பலூர், ஆக.29

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு பல்வேறுதிறன்அடிப்படையிலானபயிற்சிதிட்டங்களை வழங்கிவருகிறது. அதன்அடிப்படையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சார்ந்தவர்களுக்கு ஜெர்மன் மொழி தேர்வுக்கான பயிற்சி (German Language Test Training) அளிக்கப்படவுள்ளது. இதற்கான தகுதிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சார்ந்தவராக இருக்க வேண்டும். இப்பயிற்சிக்கு பி.எஸ்.சி நர்சிங் (B.Sc Nursing), பொது நர்சிங் மற்றும் மருத்துவ டிப்ளமோ(GNM Diploma) ஆகிய படிப்புகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் மற்றும் 21 முதல் 35 வயதிற்குள்ளும். குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.3. லட்சத்திற்குள் இருக்க வேண்டும். இப்பயிற்சிக்கான கால அளவு ஒன்பது மாதமாகும். மேலும் விடுதியில் தங்கிபடிப்பதற்கான செலவினத் தொகை தாட்கோவால் வழங்கப்படும். இப்பயிற்சி முடித்தவுடன் தகுதியான நபர்களை பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் மூலமாக தேர்வு செய்து அந்நிறுவனத்தின் சார்பாக ஜெர்மனி நாட்டில் பணிபுரிய ஆரம்ப கால மாத ஊதியமாக ரூ.2,50,000/ முதல் ரூ.3,00,000/வரை வருவாய் ஈட்ட வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும்.

இப்பயிற்சி பெற தாட்கோ இணையதளமான www.tahdco.com என்ற முகவரில் விண்ணப்பிக்கலாம். மேலும் கூடுதல் விவரங்களுக்கு 04328 – 276317 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது பெரம்பலூர், தாட்கோ, மாவட்ட மேலாளர் அலுவலகத்தை நேரிலோ அணுகி விவரம் பெற்று உரிய ஆவணங்களுடன் பதிவேற்றம்செய்துபயனடையுமாறுமாவட்ட ஆட்சித்தலைவர் அருண்ராஜ் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.



விருதுநகர் மாவட்டம், சிவகாசி மெப்கோ பொறியியல் கல்லூரியில், நேற்று (28.08.2025) தமிழ் இணையக்கல்விக் கழகம் சார்பில் நடைபெற்ற மாபெரும் தமிழ்க் கனவு தமிழ் மரபுமற்றும்பண்பாட்டுப்பரப்புரைநிகழ்ச்சியினைமாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தொடங்கி வைத்து உரையாற்றினார்.



விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று (28.08.2025) பாராளுமன்றஉறுப்பினர்மேம்பாட்டு நிதியின் கீழ் தலா ரூ.1.02 இலட்சம் மதிப்பில் 8 மாற்றுத்திறனாளிகளுக்கு மொத்தம் ரூ.8.14 இலட்சம் மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட மோட்டார் இருசக்கர வாகனங்களை விருதுநகர் பாராளுமன்ற உறுப்பினர் ப.மாணிக்கம்தாகூர் வழங்கினார்.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா, தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் நலன் காக்கும் கூட்டம்நடைபெற்றது. உடன்மாவட்டவருவாய் அலுவலர்தனலிங்கம், இணைஇயக்குநர் (Gum) வேளாண்மை செல்வராஜ். இணைப்பதிவாளர் கூட்டுறவு சங்கங்கள் மலர்விழி, இணைப்பதிவாளர் மத்திய கூட்டுறவு வங்கி ராமதாஸ், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் முதுநிலை மண்டல மேலாளர் ஏகாம்பரம், நேர்முக உதவியாளர் வேளாண்மை வெங்கடேஷ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் விவசாயிகள் உள்ளனர்.

# கணேஷ் சதுர்த்திக்கு redBus பயணத்தில் 55% உயர்வு!

சென்னை:

உலகின் மிகப்பெரிய ஆன்லைன் பேருந்து டிக்கெட் தளமான redBus, தமிழ்நாட்டிலிருந்து பேருந்து பயண தேவை ஆண்டுக்கு ஆண்டு 55% அதிகரிக்கும் என்று கணித்துள்ளது. சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் ஆகியவை இந்த பண்டிகை கூட்ட நெரிசலை அதிகரிக்கின்றன, பெங்களூரு மற்றும் ஹைதராபாத் ஆகியவை முன்னணி இடங்களாக உள்ளன. redBus, தளத்தின் தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டு கணேஷ் சதுர்த்தி காலத்தையும் கடந்த ஆண்டு பண்டிகை காலத்தையும் ஒப்பிட்டு இது கூறப்பட்டுள்ளது.

21 முதல் 35 வயதுக்குட்பட்டவர்கள் பயணிகளின் 53% பேர் உருவாக்குகின்றனர். பாலின அடிப்படையில் பார்க்கும் போது, ஆண்கள் 67% ஆகவும், பெண்கள் 33% ஆகவும் உள்ளனர். பண்டிகைக் காலப் பயணம் சௌகரியம் மற்றும் இரவு நேரப் பயணத்தை மையமாகக் கொண்டது. 70% முன்பதிவுகள் ஏசி பேருந்துகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன, அதே நேரத்தில் ஏசி அல்லாத பேருந்துகளில் 30% முன்பதிவுகள் உள்ளன. வகைகளில், படுக்கை வசதி கொண்ட பேருந்துகளில் 74% முன்பதிவுகள் உள்ளன, அதே நேரத்தில் இருக்கை வசதி கொண்ட பேருந்துகளில் 26% முன்பதிவுகள் உள்ளன, இது தமிழ்நாடு நீண்ட தூர, இரவு நேரப் பயணத்தை வலுவாக நம்பியிருப்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. தமிழ்நாட்டிலிருந்து முன்னணி பயண வழிகள்: · சென்னை பெங்களூரு. · கோயம்புத்தூர் பெங்களூரு. · மதுரை பெங்களூரு. · சென்னை ஹைதராபாத். · சென்னை புதுச்சேரி.

# லெக்சஸ் இந்தியா அறிமுகம் செய்தது புதிய 'ஸ்மார்ட் ஓனர்ஷிப்' திட்டம்

## ஆடம்பர வாகன உரிமையை எளிதாக்கும் புதிய முயற்சி




சென்னை:

லெக்சஸ் இந்தியா, ஆடம்பர வாகன உரிமையை எளிமையாக்கும் வகையில், 'ஸ்மார்ட் ஓனர்ஷிப் பிளான்' என்ற புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. இந்த திட்டம், குறைந்த மாத தவணை (EMI) மூலம் லெக்சஸ் கார்களை இயக்க அனுமதிக்கிறது. நீண்ட கால நிதி பிணைப்பு இல்லாமல், அதிக சுதந்திரம் மற்றும் நம்பகத்தன்மை வழங்குகிறது. இந்த திட்டம் 'லெக்சஸ் பிராமிஸ்' என்ற குடைச்சாயலில் உருவாக்கப்பட்டுள்ளது. அஷ்யூயர்ட் பைபேக் (Assured Buyback) விருப்பத்துடன் வாடிக்கையாளர்கள் திட்டத்தின் முடிவில் வாகனத்தை திருப்பி ஒப்படைக்கலாம், வைத்துக் கொள்ளலாம், அல்லது புது மாடல்கள் மேம்படுத்தலாம். GFV (Guaranteed Future Value) முன்கூட்டியே தெரிவிக்கப்படுவதால் மறுசந்தை மதிப்பு குறித்து கவலை இல்லை. இந்த திட்டம் தற்போது ES, NX, RX மாடல்களுக்கு வழங்கப்படுகிறது. வாடிக்கையாளர்கள் ஒவ்வொரு 3 முதல் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதிய லெக்சஸ் காருக்கு மேம்படுத்தலாம். லெக்சஸ் இந்தியா தலைவர் ஹிகாரு இகேஉச்சி கூறுகிறார்: "வாடிக்கையாளர்களின் நிதி சுதந்திரத்தையும், எதிர்கால கனவுகளையும் முன்னிட்டு நாங்கள் ஸ்மார்ட் ஓனர்ஷிப் பிளானை உருவாக்கியுள்ளோம். இது வெறும் ஆடம்பர வாகன அனுபவம் மட்டுமல்ல, மன அமைதி மற்றும் நம்பிக்கையை தருகிறது." 2024 ஜூன் 1 முதல் விற்கப்படும் அனைத்து லெக்சஸ் கார்களுக்கும் 8 ஆண்டு / 1,60,000 கிமீ உத்தரவாதம் வழங்கப்படுகிறது. மேலும், லெக்சஸ் லக்சுரி கேர் சேவைகள் – கம்ஃபர்ட், ரிலாக்ஸ், பிரீமியர் – என மூன்று விருப்பங்களில் வழங்கப்படுகிறது. 3, 5 மற்றும் 8 ஆண்டு காலத்துக்கான திட்டங்கள், பராமரிப்பு சேவைகளுடன் வருகிறது. லெக்சஸ் பிராமிஸ், லக்சுரி கேர் மற்றும் ஸ்மார்ட் ஓனர்ஷிப் பிளான்மூலமாக, லெக்சஸ் ஆடம்பர அனுபவத்தை மிக எளிமையாக உருவாக்குகிறது.

# இன்ஃபினிக்ஸ் HOT 60i 5G இப்போது ₹9,299 விலையில் கிடைக்கிறது,




சென்னை :

புதிய தலைமுறை ஸ்மார்ட்போன் பிராண்டான இன்ஃபினிக்ஸ், தனது புதிய HOT 60i 5G மாடலை ₹9,299 விலையில் ஃப்ளிப்கார்ட் மற்றும் ரீடெயில் கடைகளில் அறிமுகம் செய்துள்ளது. இது அனைத்து நெட்வொர்க்குகளிலும் வேகமான 5G இணைப்புடன் வருகிறது. சக்திவாய்ந்த 6000mAh பேட்டரி நீண்ட நேரம் நீடிக்கும் வசதியுடன் உள்ளது. HOT 60i 5Gஇல் உள்ள அல்ட்ரா லிங்க் "நோ நெட்வொர்க் கால்" தொழில்நுட்பம் மூலம், மொபைல் சிக்னல் இல்லாத இடங்களிலும் சாதனத்திலிருந்து சாதனத்திற்கு நேரடி அழைப்புகள் சாத்தியம்.

மீடியாடெக் டைமென்சிட்டி 6400 5G பிராசஸர், 470K+ AnTuTu ஸ்கோர் பெற்றதால் கேமிங், வீடியோ ஸ்ட்ரீமிங் மற்றும் வேலையிலும் சிறந்த செயல்திறனை வழங்குகிறது. 8GB RAM மற்றும் 128GB ஸ்டோரேஜ் (2TB வரை விரிவாக்கக்கூடிய) கொண்டுள்ளது. பேட்டரி 128 மணி நேரம் இசை, 41.2 மணி நேரம் அழைப்புக்கு பயன்படும். 18W டைப்Cஃபாஸ்ட் சார்ஜர் மற்றும் ரிவர்ஸ் வயர்டு சார்ஜிங் வசதி பயனர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். XOS 15 (ஆண்ட்ராய்டு 15) மேம்பட்ட AI அம்சங்களை கொண்டுள்ள HOT 60i, AI கால் டிரான்ஸ்லேஷன், AI ரைட்டிங் அசிஸ்டென்ட், AI எரேஸர் போன்ற கருவிகளை வழங்குகிறது.

6.75இன்ச் HD+ டிஸ்ப்ளே, 120Hz ரெஃப்ரெஷ் ரேட், 670 நிட்ஸ் பிரைட்னஸ் கொண்ட இந்த சாதனத்தில் 50MP அல்ட்ராக்ளியர் ரியர் கேமரா, 1010+ AI மோட்ஸ் உள்ளன. IP64 தூசி மற்றும் நீர் எதிர்ப்பு பாதுகாப்பும் உள்ளது. இன்ஃபினிக்ஸ் இந்தியா பிரதிநிதி அருண் குமார் கூறுகிறார்: HOT 60i 5G, மாணவர்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு மிகத் தகுதியான சாதனம். குறைந்த விலையில் பிரீமியம் AI அம்சங்களுடன் 5G அனுபவத்தை வழங்குகிறது. "மேட் டூயல்டோன் ஃபினிஷ் மற்றும் ஸ்டைலிஷ் கேமரா மாட்யூல் கொண்ட இந்த மாடல், ஷாடோ ப்ளூ, மான்சூன் கிரீன், பிளம் ரெட் மற்றும் ஸ்லீக் பிளாக் நிறங்களில் கிடைக்கிறது. இந்தியாவின் மேம்பட்ட 5G ஸ்மார்ட்போன் அனுபவத்தை பெற விரும்புவோர், இப்போதே வாங்குங்கள்!

# 2015ல் நடைபெற்ற ஆம்பூர் கலவரம் தொடர்பான வழக்கில் 154 நபர்கள் விடுதலை!

## 22 நபர்கள் குற்றவாளிகள் என மாவட்ட நீதிபதி மீனாகுமாரி அதிரடி தீர்ப்பு!!

திருப்பத்தூர், ஆக.29

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூரைச் சேர்ந்த ஷமீல் அஹமது என்ற இளைஞரை, பள்ளிகொண்டா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அணைக்கட்டு பகுதியை சேர்ந்த பழனி என்பவரின் மனைவி பவித்ரா காணாமல் போனது தொடர்பாக விசாரிப்பதற்காக காவல்துறையினர் அழைத்துச் சென்றனர்.

விசாரணையின் போது, அவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டதால் சென்னையில் உள்ள அரசு தலைமை மருத்துவமனையில் ஷமீல் அகமது சேர்க்கப்பட்டார். இந்நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். அந்த இளைஞர் காவலில் இருந்த போது காவல்துறையினர் தாக்கியதாலேயே உயிரிழந்ததாக ஷமீல் அகமதுவின் உறவினர்கள் குற்றம்சாட்டினர். இதில் ஷமீல் அகமது உறவினர்கள், இஸ்லாமிய அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் என ஆயிரக் கணக்கானோர் ஒன்று கூடி தேசிய நெடுஞ்சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது பேருந்துகள், காவல்துறை வாகனங்கள், மதுபான கடை, தனியார் மருத்துவமனை மற்றும் கடைகள் உள்ளிட்டவை சேதப்படுத்தப்பட்டது. இதில் 71 காவலர்கள் காயம் அடைந்தனர். இது தொடர்பாக 191 நபர்கள் மீது 7 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு திருப்பத்தூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்றது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு திருப்பத்தூர் மாவட்ட நீதிபதி மீனா குமாரி அவர்களால் பரபரப்பான தீர்ப்பு நேற்று (28.08.2025) வழங்கப்பட்டது.

இதில் 191 நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், அதில் 15 நபர்கள் உயிரிழந்த நிலையில் 176 நபர்கள் விடுதலை செய்யப்பட்டு, 22 நபர்கள் குற்றவாளிகள் என தீர்ப்பு வழங்கினார். மேலும் அரசு சொத்துக்கு நஷ்டம் ஏற்பட்டதன் காரணமாக ஆம்பூர் பகுதியைச் சேர்ந்த முன்னாள் மனித நேய மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் அஸ்லாம் பாஷா தலைமையில் இந்த வன்முறை நடைபெற்றதாகவும் எனவே அவருடைய குடும்ப சொத்தில் இருந்து வருவாய்த்துறையினர் வரையறை செய்து சொத்துக்களை பறிமுதல் செய்ய வேண்டும் என்றும் அதே போல அரசாங்கமும் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்தார்.

உணவு இடைவேளைக்கு பிறகு மாவட்ட நீதிபதி மீனாகுமாரி 22 பேருக்கும் தாங்கள் செய்த குற்றத்திற்காக ஒவ்வொருவருக்கும் மூன்று வருடங்கள், இரண்டு வருடங்கள், ஒரு வருடங்கள் மற்றும் அபராத தொகை என அனைவருக்கும் தண்டனை வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டு பேருக்கு தலா ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் எனவும், காயம் பட்டவர்களுக்கு ஒரு லட்ச ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும். மேலும் ஒரு மாதத்திற்குள் இழப்பீட்டை பெற்று தர வேண்டும் எனவும் தீர்ப்பளித்தார். அதன்படி ஆம்பூர் கலவர வழக்கில் குற்றவாளி என அறிவிக்கப்பட்ட 22 நபர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனை விவரம்: அவரவர்கள் மீது தொடரப்பட்ட குற்றப் பிரிவுகளுக்கு ஏற்ப குறைந்தபட்சம் மூன்றாண்டு முதல் அதிகபட்சம் 14 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும் ரூ.3000 முதல் ரூ.25,000 ரூபாய் வரை அபராதம் வழங்கி உத்தரவிட்டார். மேலும் பாதிக்கப்பட்ட தலைமை காவலர் விஜயகுமாருக்கு ரூ.10 லட்சம், பாதிக்கப்பட்ட பெண் காவலர் ராஜலட்சுமிக்கு ரூ.10 லட்சம், அரசு சாட்சிகளுக்கு தலா ரூ.ஒரு லட்சம் வழங்கி உத்தரவிட்டது. பாதிக்கப்பட்ட பெண் காவலர்களை தோலில் சுமந்து காப்பாற்றிய காவலர் ராஜாவுக்கு நீதிமன்றம் பாராட்டு தெரிவித்தது.

# நிவா புபா ரீஅஷ்யூர் 3.0 மூலம் வரம்புகளை உடைக்கிறது:

## வரம்புகள் இன்றி கவரேஜ் வழங்குகிறது

சென்னை, ஆகஸ்ட் 29, 2025 —

நிவாபுபாஹெல்த்இன்ஷூரன்ஸ்தனதுபுரட்சிகரமான புதிய தயாரிப்பு 'ரீஅஷ்யூர் 3.0'ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த தயாரிப்பு, ஹெல்த் இன்ஷூரன்ஸ் துறையில் உள்ள மரபுவழி வரம்புகளை முறியடித்து, அனைத்து நோய்களுக்கும், எல்லா கோரிக்கைகளுக்கும், ஒவ்வொருமுறையும்வரம்பற்ற அடிப்படை தொகை காப்பீடு வழங்குகிறது. வாடிக்கையாளர்கள்மருத்துவ செலவுகளைப் பற்றி கவலைப்படாமல் சிகிச்சையில் முழுமையாக கவனம் செலுத்த முடியும்.




இந்த தயாரிப்பின் முக்கிய அம்சங்களில் ஒன்று, முதல் நாளிலிருந்தே 145 முன் உள்ள நிலைகளுக்கு கவரேஜ் வழங்கப்படுவதாகும். கூடுதலாக, 'வெல்கன்சல்ட்+' என்ற விருப்ப நன்மை மூலம், OPD கவரேஜ் வழங்கப்படுகிறது – இது மருந்துகள், ஆலோசனைகள், பல் மற்றும் மனநலம் சேவைகள் உள்ளிட்டவை வரை சென்று, தினசரி மருத்துவச் செலவுகளையும் உள்ளடக்குகிறது. போர்டர்லெஸ் கவரேஜ் அம்சத்துடன், வாடிக்கையாளர்கள் உலகின் எங்கும் சிகிச்சை பெறலாம். சிலக்ட் வகையில் ரூ.10 லட்சம் வரை, எலீட் வகையில் ரூ.50 லட்சம் வரை, மற்றும் பிளாக் வகையில் ரூ.5 கோடி வரை கவரேஜ் வழங்கப்படுகிறது. 35 வயதுடைய ஒருவருக்கான வருடாந்திர காப்பீட்டு கட்டணம் ரூ.10,508 முதல் ரூ.15,883 வரை இருக்கும், தேர்ந்தெடுக்கப்படும் திட்டத்தைப் பொறுத்து.

நிவா புபாவின் இயக்குநரும் செயல்தலைவருமான டாக்டர் பபதோஷ் மிஸ்ரா கூறும்போது, "ரீஅஷ்யூர் 3.0, தொகை காப்பீட்டில் வரம்பற்ற பாதுகாப்பை வழங்கும் இறுதியான தீர்வாகும். இது ஒரு புதிய அளவுகோலை நிலைநாட்டுகிறது. OPD மற்றும் முதல் நாள் கவரேஜ் போன்ற அம்சங்களுடன், இது இந்தியாவில் உள்ள மிக விரிவான ஹெல்த் இன்ஷூரன்ஸ் திட்டங்களில் ஒன்றாகும்," என்று தெரிவித்தார்.

## குடியாத்தம் அருகே

# மின்கம்பம் உடைந்து விழுந்ததில் 5 வயது சிறுமி உயிரிழப்பு

வேலூர், ஆக.29

வேலூர்மாவட்டம், குடியாத்தம் அடுத்த நத்தமேடு கிராமத்தில் கட்டிடத் தொழிலாளி குமார் மற்றும் ஜானகி இருவருக்கும் நான்கு பெண்குழந்தைகள் உள்ளனர்.



இவர் வீட்டின் அருகே அத்திராமுலு என்பவருக்கு சொந்தமான விவசாய நிலத்தில் தென்னை மரம் வெட்டியபோது தென்னை மரம் மின் கம்பியின் மீது சாய்ந்ததில் குமார் என்பவரின் வீட்டின் அருகே இருந்த மின் கம்பம் உடைந்து சாய்ந்ததில் வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்த குமாரின் மூன்றாவது 5 வயது நவ்யா பெண் குழந்தை மின் கம்பியில் சிக்கி உயிரிழந்தார். மேலும் அருகே இருந்த நாய் ஒன்றும் மின் கம்பியில் சிக்கி உயிரிழந்தது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த குடியாத்தம் போலீசார் மற்றும் மின் துறை அதிகாரிகள் சிறுமியின் உடலை மீட்டு உடற்கூறு ஆய்வுக்காக குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து குடியாத்தம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தின காற்று



# கைலாசநாதர் மலைக்கோவில் மகா கும்பாபிஷேகம்





தேனி, ஆக.29

தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே கைலாசபட்டி பகுதி மலைமேல் அமைந்துள்ளது அருள்மிகு ஸ்ரீ பெரியநாயகி அம்மன் உடனுறை கைலாசநாதர் திருக்கோவில்.

இந்து சமய அறநிலையத்துறைக்கு கட்டுப்பட்ட இத்திருக்கோவில் தேனி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற கோவில்களில் ஒன்று. திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோவிலுக்கு அடுத்தபடியாக இந்த திருக்கோவிலில் ஒவ்வொரு ஆண்டு கார்த்திகை தீபத் திருவிழாவின் போதும் ஏராளமான பக்த கோடிகள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்து வழிபடுவது வழக்கம். இந்த திருக்கோவில் கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்த நிலையில் கடந்த ஆகஸ்ட் 21ம் தேதி மகா கும்பாபிஷேக விழாவிற்கான முகூர்த்தக்கால் நடுதல், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் முன்னிலையில் நடைபெற்றது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் திருக்கோவிலில் பாலாலயம் நடத்தப்பட்டு, திருப்பணிகள் நடைபெற்று வந்த நிலையில், மகா கும்பாபிஷேகம் இன்று ஆகஸ்ட் 29ல் நடைபெறுவதை முன்னிட்டு முதல் கால பூஜையாக கடந்த புதன்கிழமை காலை 9.15 மணிமுதல் காலை 11 .30 மணிவரை விக்னேச்வர பூஜை, புண்யாஹவாசனம், மஹா கணபதி ஹோமம், நவக்ரஹ ஹோமம், அக்னி ஸஸ்க்ரஹணம், தீர்த்த ஸங்க்ரஹணம், பரிவார கலாகர்ஷணம் மற்றும் யாகசாலை நிர்மாணம் தீபாராதனை நடத்தப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப் பட்டது.

அதனைத் தொடர்ந்து அன்றைய தினம் விநாயகர் சதுர்த்தி என்பதால் கோவில் வளாகத்தில் உள்ள விநாயகர் சிலைக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகளும் நடைபெற்றது. இதில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு விநாயகரை வழிபட்டு சென்றனர்.

கும்பாபி ஷேகம் நடைபெற உள்ள நிலையில் கோவிலில் கடந்த சில நாட்களாக பல்வேறு பூஜைகள் செய்து அதற்கான பணிகள் விருவிருப்பாக நடைபெற்று வந்தது. முதல்கால யாகபூஜையில் முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் அவரது குடும்பத்தினருடன் கலந்து கொண்டார். அன்று இரவு கோவில் வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு பூஜையில் பங்கேற்றனர். மேலும் நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் மற்றும் அவரது குடும்பத்தினர், கோவில் அன்பர் பணி செய்யும் பராமரிப்பு குழு தலைவர் வி.ப.ஜெய பிரதீப், செயலாளர் சிவக்குமார் உள்ளிட்டோர் பார்வையிட்டு சிறப்பாக செய்தனர்.

மேலும் கும்பாபிஷேக நிகழ்வில் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து முன்னேற்பாடுகளையும் செய்துள்ளனர். தேனி மாவட்டம் மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கானோர் இந்த கும்பாபிஷேக விழாவில் கலந்துகொள்ளவுள்ள நிலையில் அனைவருக்கும் அன்னதானம் கோவில் அன்பர் பணி செய்யும் பராமரிப்பு குழு தலைவர் வி.ப. ஜெயபிரதீப் ஏற்பாடு செய்து உள்ளார்.

கும்பாபிஷேகத்துக்கு வரும் பக்தர்கள் பொதுமக்கள் என அனைவரையும் கோவில் நிர்வாகத்தின் சார்பில் அன்புடன் வரவேற்கின்றனர்.




மதுரை மாவட்டம் மதுரை கிழக்கு ஒன்றியம் எல் கே பி நகர் அரசு பள்ளியில் நடைபெற்ற சக்கிமங்கலம் குறுவள மைய அளவிலான கலைத் திருவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசளிப்பு விழா மற்றும் நடுவர்களை கௌரவிக்கும் விழா ஆகியவை மதுரை கிழக்கு வட்டாரக் கல்வி அலுவலர் சாந்தி தலைமையில் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் தென்னவன் முன்னிலை வகித்தார். ஆசிரியை விஜயலட்சுமி வரவேற்றார். சக்கிமங்கலம் குறுவள மையத்திற்குட் பட்ட 12 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் கலைத்திருவிழாவில் பங்கு பெற்றன. இதில் முதல், இரண்டு, மூன்றாம் இடங்களை பிடித்த மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன. நடுவர்களாக பணியாற்றிய ஆனந்தி, பாண்டியராஜன், ஸ்டீபன், பிரதீபா, வேல் விழி, ராதா, மணிமாலா ஆகிய ஆசிரியர்கள் கௌரவிக்கப் பட்டனர். ஆசிரியை அருவகம் தொகுத்து வழங்கினார். ஆசிரியர் பயிற்றுநர் சிவ பார்வதி நன்றி கூறினார்.



நாகர்கோவில் மாநகராட்சி 1வது வார்டுக்குட்பட்ட ஆளூர் அம்மன் கோவில் தெரு மற்றும் புன்னவிளை பகுதியில் ரூ 50.00 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணி. 19வது வார்டுக்குட்பட்ட மேல ஆசாரிபள்ளம் ஆர்.சி.சர்ச் அருகில் ரூ 3.60 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. ஆகிய பணிகளை நேற்று மாநகராட்சி மேயர் மகேஷ் துவக்கி வைத்தார். உடன் மாநகராட்சி துணை மேயர் மேரி பிரின்சி லதா மற்றும் வார்டு கவுன்சிலர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர் .

## வேலூர் ஆற்காடு சாலையில் தனியார் ஆம்புலன்ஸ்களுக்கு போக்குவரத்து போலீசார் பூட்டு போட்டதை கண்டித்து போராட்டம்



வேலூர், ஆக.29

வேலூர் ஆற்காடு சாலையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் (CMC) சிகிச்சை பெறுவதற்காக வேலூர் மாவட்டம் மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களில் இருந்து தினமும் ஆயிரக்கணக்கான நோயாளிகள் வந்து செல்கின்றனர்.

இதனால் ஆற்காடு சாலை எப்போதும் பரபரப்பாக காணப்படுகிறது. ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக வருபவர்கள் தங்களது கார் பைக் உள்ளிட்ட வாகனங்களை போக்குவரத்திற்கு இடையூறாக சாலையோரங்களில் நிறுத்திவிட்டு செல்கின்றனர். இதனால் எப்போது பார்த்தாலும் ஆற்காடு சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் அவ்வழியாக செல்பவர்கள் கடும் சிரமத்துடன் செல்கின்றனர். இந்த நிலையி ல் சாலையோரம் நிறுத்திவிட்டு செல்லும் வாகனங்களுக்கு போக்குவரத்து போலீசார் வாகனங்களை எடுக்க முடியாதவாறு பூட்டு போட்டு அபராதம் விதிக்கின்றனர். அதன்படி நேற்று சாலையோரம் நிறுத்தி வைத்திருந்த தனியார் ஆம்புலன்ஸ்களுக்கு போக்குவரத்து போலீசார் பூட்டு போட்டனர். இதனால் ஆம்புலன்ஸ் டிரைவர்கள் நோயாளிகளை ஏற்றி செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது. போக்குவரத்து போலீசாரின் இந்த செயலை கண்டித்து ஆம்புலன்ஸ் டிரைவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அவர்கள் கூறியதாவது, அனாதை பிணங்களை ஏற்றிச் செல்ல போலீசார் எங்களது ஆம்புலன்ஸ்களை இலவசமாக பயன்படுத்துகின்றனர். நாங்கள் பல ஆண்டுகளாக போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் சாலை ஓரமாக வாகனங்களை நிறுத்தி வைத்து இருக்கிறோம். ஆம்புலன்ஸ் வாகனங்களுக்கு பூட்டு போட்டதால் அவதி அடைந்து வருவதாக தெரிவித்தனர். பூட்டு போடப்பட்ட ஆம்புலன்ஸ் திடீரென நோயாளிகள் அழைப்பு வந்தால் என்ன செய்வது என்று வேதனை தெரிவித்தனர்.



தமிழ்நாடு அரசின் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாம், சென்னை, அண்ணாநகர் மண்டலம் 8, 103 வது வட்டம் பகுதியில் நேற்று (28.08.2025) நடைபெற்றது. நிகழ்ச்சியில் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், அண்ணாநகர் வடக்கு பகுதி செயலாளர் பரமசிவம், திமுக மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், மாமன்ற உறுப்பினர் புஷ்பலதா ஜெய்சங்கர், வட்டக் கழக செயலாளர்கள் ஜெய்சங்கர், அருள்கண்ணன் மாநகராட்சி மண்டல அதிகாரி சுந்தர்ராஜன் ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தனர். இந்நிகழ்வில் திமுக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு, தங்கள் கோரிக்கை மனுக்களை அளித்தனர்.




சென்னையில் நடைபெற்ற அனைத்து அமைப்புசாரா தொ.மு.ச. மாவட்ட, மாநில நிர்வாகிகள், வாரிய கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் திருவண்ணாமலை மாவட்ட கண்காணிப்பு குழு உறுப்பினர் A.A.ஆறுமுகம், பேசிய போது. உடன் பொதுச் செயலாளர் இரா.பொன்ராம், பொருளாளர் ராஜாகுப்புசாமி, துணைத் தலைவர் ஜே.பழனி, உள்ளிட்ட மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம், நாட்டரசன் கோட்டை அருகே கொல்லங்குடியில் நேற்று முன்தினம் மாட்டுவண்டி எல்லை பந்தயம் நடைபெற்றது. காவல் துறையினரின் அனுமதியின்றி நடைபெற்ற இந்த பந்தயத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 44 ஜோடி மாடுகள் பங்கேற்றன. பெரிய மாட்டு பிரிவில் 17 ஜோடிகளும் இரு சுற்றுகளாக நடைபெற்ற சிறிய மாட்டு பிரிவில் 27 ஜோடி மாடுகளும் பங்கேற்றன. இப்போட்டியின் போது போட்டி போட்டு முன்னேறி சென்று கொண்டிருந்த இரு வண்டிகள் சாலையின் ஓரத்தில் சென்று கொண்டிருந்த மூதாட்டியின் மீது மாடு முட்டி தூக்கி வீசியது. இதில் அதிர்ஷ்டவசமாக சிறு காயங்களுடன் தப்பிய மூதாட்டி பின்னர் எழுந்து நடந்து சென்றார். இதே போல் இந்த மாட்டு வண்டி பந்தயத்தின் போது ஒரு மாடு கால் இடறி கீழே விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் அந்த மாட்டிற்கு சிகிச்சை அளிப்பதற்காக கொண்டு சென்றதால் போட்டியிலிருந்து அந்த மாட்டு வண்டி விலகியது. இந்த இரு பதபதைக்கும் காட்சிகள் தற்போது சமூக வலைதளங்களில் வைரல் ஆகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



வேலூர் மாவட்டம், வேலூர் கொசப்பேட்டை சிஎஸ்பி பில்டிங்ல் நடேசன் கிளினிக் அண்ட் நியூரோவேவ்ஸ் டயக்னெஸ்டிக்ஸ் திறப்பு விழாவில், சிறப்பு விருந்தினராக டைரக்டர் ஆப் நியூரோ சைன்ஸ் க்ளெனீகல்ஸ் குளோபல் மருத்துவமனை டாக்டர் தினேஷ் நாயக் கலந்து கொண்டு துவக்கி வைத்தார். உடன் டாக்டர் நடேசன் தாமோதரன், திமுக பிரமுகர் சுப்பிரமணி மற்றும் மருத்துவர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம், வேலூர் சங்கரன் பாளையம் வீராசாமி நகரில் நேற்று (28.08.2025) அசோகா நீரிழிவு மற்றும் மகளிர் மருத்துவ மையம் திறப்பு விழாவில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் விஐடி பல்கலைக்கழகம் வேந்தர் முனைவர் கோ.விசுவநாதன், கலந்து கொண்டு துவக்கி வைத்தார். உடன் சிறப்பு விருந்தினர்களாக அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி. நந்தகுமார், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் ப. கார்த்திகேயன், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாமன்ற உறுப்பினர் தவமணி தாமோதரன் மற்றும் ராமலிங்கம், ஜெயந்தி, தாமோதரன், புவனேஸ்வரி, உள்ளிட்டோர் பலர் கலந்துகொண்டனர்.



தேனி மாவட்டம், சின்னமனூர், ஓடைப்பட்டி பச்சையப்பா மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் சார்பில் பயனாளிகளுக்கு நடமாடும் காய்கறி வண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் மற்றும் கம்பம் எம்.எல்.ஏ., கம்பம் ராமகிருஷ்ணன் ஆகியோர் காய்கறிகள் வண்டி வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுத்துத் தந்தனர். இந்நிகழ்ச்சியில் தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் நிர்மலா, உதவி இயக்குநர் கார்த்தி ராஜா, தோட்டக்கலை அலுவலர் எஸ். பழனிவேல்ராஜன் கலந்து கொண்டனர். மேலும் காய்கறி விதைப் பொட்டலமும், பனை மேம்பாடு இயக்கத்தின் மூலம் பனை விதைகள் இலவசமாக வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் உதவி அலுவலர்கள் முருகன், ஜகதீஷ் மற்றும் ஆண்டிச்சாமியும் உடனிருந்தனர்.




செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், இலத்தூர் ஊராட்சி ஒன்றியம், தேவராஜபுரம் பகுதியில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா நேற்று 28.8.2025 ஆய்வு செய்தார். இதில், ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் தணிகாசலம் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.



வேலூர் மாவட்டம், காட்பாடி தெற்கு பகுதிக்குட்பட்ட 8வது வார்டு கஸ்தூரிபாய் தெருவில் 27.08.2025 அன்று ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு பிரம்மாண்டமாக நடைபெற்ற ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி பெருவிழாவில், வேலூர் மாநகராட்சி துணை மேயர் எம். சுனில்குமார் ஏற்பாட்டில் அறுசுவை விருந்து பரிமாறப்பட்டது. இதில் வட்டச் செயலாளர் சசிகுமார், கட்சி நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்

Printed by D.LOGANATHAN and Published by D.LOGANATHAN, on Behalf of D.LOGANATHAN, Printed at J.M.PROCESS , No.29, V.N.Doss Road, Border Thottam, Mount Road, Chennai-600002 and Published From No.53, 3'rd Street. Conron Smith Nagar. Perambur-Barracks Road, Pattalam. Chennai-600012. Editor: D.LOGANATHAN